**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 101 **நாள்:** 16.02.2026

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் “உலகம் உங்கள் கையில்” எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், அண்ணா பொறியியல் கல்லூரியில் பயிலும் 1,657 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (16.02.2026) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளைச் சார்ந்த 1,657 கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அவ்வாறாக, தமிழகம் முழுவதும் உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று, கிண்டி பொறியியல் கல்லூரி, கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சார்ந்த 1,657 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் வெ. குமரேசன், கிண்டி பொறியியல் கல்லூரி புலமுதல்வர் முனைவர் பி. ஹரிஹரன், கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**